சென்னை

சரணாகதி மந்திரிகள்.

இன்னும் எத்தனை நாள்?

இன்றைக்கு

324-வது நாள்.


# விடுதலை.

ஈரோடு 1938-ஹு ஜூன்-மீ 3 உ

வெள்ளிக்கிழமை


# ஹிந்தி கட்டாயபாட மர்மம்.

## III

இந்தியா உண்மையான முன்னேற்றமடைய வேண்டுமானால்—குடியேற்ற காட்டந்தஸ்தோ, பூரண சுயராஜ்யமோ பெற வேண்டுமானால்-சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு ஏற்பட்டுத் தீர வேண்டும். இந்தியாவின் மூன்றிலொரு பகுதி கொண்ட சுதேச சமஸ்தானங்களை ஒதுக்கி வைத்து விட்டு பிரிட்டிஷ் இந்தியா மட்டும் பூரண சுயராஜ்யம் பெற முயல்வது பயனற்ற வேலையாகும். சமஸ்தானங்களும்—பிரிட்டிஷ் இந்தியாவும் கலந்த ஐக்கிய இந்தியா ஏற்பட வேண்டியதின் அவசியத்தைப்பற்றி 1904-வது வருஷத்தில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கரசுக்குத் தலைமை வகித்த ஸர். ஹென்றி காட்டனும் பேசியிருக்கிறார். பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டு, மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு ஏற்படும்போது தான் இந்தியாவில் உண்மையான ஐக்கியம் ஏற்படும். ஆனால் அந்த நிலைமையை உண்டுபண்ணுவது அவ்வளவு சுலப சாத்தியமான வேலையல்ல. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் சுய ஆட்சி பெற்றுவிட்டன. சமஸ்தானங்களில் முடியாட்சி நடைபெற்று வருகிறது. முடியாட்சியையும் ஜனநாயகப் பொறுப்பாட்சியையும் இணைப்பது இயற்கைக்கு மாறானதாயினும் இந்திய பொது க்ஷேமத்தைக் கருதி அவைகளுக்குள் ஏகதேச அளவிலாவது ஒரு ஒற்றுமை ஏற்படுத்தித் தீர வேண்டியது மிகவும் அவசியம்.

### காங்கரஸ் விதண்டாவாதம்

அவ்வாறு ஏற்படுத்தப்படும்போது தான் ஒரு உறுதியான மத்திய சர்க்கார் ஏற்படமுடியும். ஒரு உறுதியான சமஷ்டி அரசியல் ஏற்படவேண்டியதின் அவசியத்தை காங்கரஸ் ஒப்புக்கொண்டாலும் ஏட்டுச் சுரைக்காய் வாதங்கள் கூறி முடியாட்சி நடைபெறும் சமஸ்தானங்களும், குடியாட்சி நடைபெறும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சமஷ்டியில் சேர முடியாதென்று காங்கரஸ்காரர் விதண்டாவாதம் செய்துவருகின்றனர். ஆனால் அவர்களுடைய விதண்டாவாதங்கள் எல்லாம் ஒழிந்து எங் காளாவது ஒரு நாள் சமஷ்டி ஏற்படப் போவது நிச்சயம். பல பாஷை பேசும் சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் அடங்கிய ஒரு சமஷ்டி அரசியல் ஏற்படும்போது அந்த சமஷ்டி அரசியலுக்கு ஒரு அகில இந்திய பொது பாஷை தேவைப்படுவது இயற்கையே. எனவே இந்திய மாகாணங்களும், சமஸ்தானங்களும் சேர்ந்து ஆலோசித்து அந்த அகில இந்திய பொது பாஷையை நிர்ணயம் செய்ய வேண்டியதே நியாயம். பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும்போது அந்தந்த மாகாண பாஷையே சர்க்கார் பாஷையாக இருக்கும்—இருந்து தீர வேண்டும். அந்தந்த மாகாண பாஷைகள் சர்க்கார் பாஷைகளாக ஒப்புக்கொள்ளப்படும்போது தான் உண்மையான கலா, நாகரிக வளர்ச்சியும் ஜனநாயக வளர்ச்சியும் ஏற்படும்.

### பொதுபாஷை கட்டாய பாடமாக இருத்தல் கூடாது.

இதைஎவருக்கும் மறுக்க முடியாது. ஆகவே சமஷ்டிப் பொது பாஷை மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் புரியக்கூடியதாயும், திருப்தியளிக்கக் கூடியதாயும் இருக்க வேண்டும். அவ்வாறு ஏற்படும் பொது பாஷையை இந்தியா முழுமைக்கும் கட்டாய பாஷையாகவும்ஏற்படுத்தக்கூடாது. சமஷ்டி அரசியலுக்கே பொதுபாஷை இன்றியமையாதிருக்கையில் அந்த சமஷ்டி அரசியலில் கலந்து கொள்ள முடியாதவர்களும் அந்த பொதுபாஷையைக் கற்றுத் தீர வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவது நீதியே ஆகாது.

சமஷ்டி அரசியலில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் எவ்வளவு தான் அதிகப்படியாகப் போனாலும் ஆயிரம் பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். எனவே அந்த ஆயிரம் பேருக்காக 35 கோடி இந்திய மக்களும் ஒரு பொது பாஷையைஏன்கட்டாயபாடமாக கற்க வேண்டும்? தாய் மொழிக்குப் புறம்பாக ஒரு அந்நிய பாஷையைக் கற்பது வீண் சிரமமும் பண நஷ்டமும் தானே? ஆகவே அகில இந்திய பொது பாஷையாக இருக்க வேண்டிய சமஷ்டி பாஷையும் விருப்பப் பாடமாக அமைய வேண்டியதே முறை. இனி அகில இந்திய பொது பாஷையாக இருக்கக்கூடிய பாஷை எது என ஆராய்வோம். ஹிந்தியே பொது பாஷையாக இருக்க லாயக்குடையதென காங்கரஸ்காரரில் ஒரு சாரார் சொல்லுகிறார்கள். இவ் விஷயமாக அகில இந்திய காங்கரஸ் எத்தகைய முடிவும் செய்யவுமில்லை. ஹிந்தி தாய் மொழியாக இல்லாதவர்கள் மீது அதைவலுக் கட்டாயமாக ஏற்றக் கூடாதென்று காந்தியாரும் ஜவஹர்லாலும் சொல்லியிருக்கிறார்களாம், வங்காளிகளும் ஹிந்தி கட்டாய பாடத்தை ஆதரிக்கவில்லை. ஹிந்தி, இந்தியர்களில் பெரும்பாலாரால் பேசப்படும் பாஷை என்ற விஷயத்தில் பலமான அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது.

### பொதுப் பாஷைக்கு லாயக்குடையது இங்கிலீஷே.

உருதுவே பெரும்பாலாரால் பேசப்படும் பாஷை என்பது வேறொரு சாரார் அபிப்பிராயம். ஹிந்தியை முஸ்லிம்கள் ஆதரிக்கவில்லை. தென்னாட்டிலே தமிழர்களும் ஆதரிக்கவில்லை. உர்துவை பொது பாஷையாக்கினாலும் உர்துவைத் தாய் மொழியாகக்கொள்ளாதவர்கள் எதிர்க்கக்கூடும். மேலும் ஹிந்தி விருத்தியடையாத ஒரு லம்பாடி பாஷை. சொந்த லிபியோ இலக்கண இலக்கியங்களோ இல்லாத பாஷை. இதை ஹிந்தி அபிமானிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். உருது அத்தகையதல்ல. செவ்வையாக விருத்தியடைந்த பாஷை. இலக்கண இலக்கியங்களும் கலா நூல்களும் நிறைந்த பாஷை. ஹைதராபாத் சமஸ்தானத்திலே ராஜ பாஷையாய் விளங்கும் பாஷை. ஹைதராபாத் சர்க்கார் முயற்சியினாலும், ஆதரவினாலும் மேனாட்டு விஞ்ஞான நூல்களும் உருது மொழியிலே எழுதப்பட்டுள்ளன. எனவே ஹிந்தியை விட எத்தனையோ பங்குஉருது உயரிய மொழியாக இருந்தாலும் அம்மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு தாய் மொழிக்குப் புறம்பாக அதையும் கற்பது வெகு சிரமமாகத்தான் இருக்கும். சமஷ்டி ஏற்படும்போது ஒரு பொது மொழியும் ஏற்பட்டுத் தீர வேண்டியது இன்றியமையாததாயிருப்பதினால் எல்லாருக்கும் திருப்தியளிக்கக் கூடியதும் இலகுவில் கற்றுக்கொள்ளக் கூடியதும் ஒரு பாஷைக்குத் தேவையான அம்சங்களையெல்லாம் உடைத்தாயிருப்பதுமானஒருபாஷையே இந்திய பொது பாஷையாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு அதிக எதிர்ப்பு இருக்காதென்றே நினைக்கிறோம். அத்தகைய பாஷை இங்கிலீஷ் என்பதே நமது சொந்த அபிப்பிராயம். இங்கிலீஷ் இந்திய மக்கள் அனைவராலும் பிரியமாகக் கற்பிக்கப்படும், பாஷை. சுமார் 150 வருஷ காலமாக சர்க்கார் மொழியாக இருந்து மதிப்புப் பெற்ற பாஷை. இந்தியர்கள் உள்ளத்து சுதந்தர உணர்ச்சியை உண்டு பண்ணிய பாஷை. இந்தியர்களுக்குப் பகுத்தறிவை ஊட்டிய பாஷை. இந்தியாவுக்கு மட்டுமன்றி உலகம் முழுமைக்கு பொது பாஷையாக இருந்து வரும் பாஷை. பிரபல காங்கரஸ் தலைவர்களால் போற்றிப் புகழப்பட்ட பாஷை. ஸர். ஸி. வி. ராமன், ஸர். ராதாகிருஷ்ணன், டாக்டர் தாகூர் போன்றார் உலகு மதிப்புப் பெற உதவிபுரிந்த பாஷை. அதிக சிரமமின்றி இந்தியா முழுதும் பரவி விருத்தியடையக்கூடிய பாஷை. தற்கால ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் அந்தந்த மாகாண பாஷைகளை முக்கியபாஷையாகவும் ஆங்கிலத்தை இரண்டாவது கட்டாய பாஷையாகவும் ஆக்கி விட்டால் பொதுமொழிப் பிரச்சினை வெகு சுளுவாகத் தீர்ந்து விடும்.

நாளை, இங்கிலீஷ் மீது காங்கரஸ்காரருக்கு — முக்கியமாக காங்கரஸ் பார்ப்பனர்களுக்கு வெறுப்புத் தோன்றிய காரணங்களை விளக்குவோம்.

---

## அநுதாபம்.

தஞ்சை சுயமரியாதை இயக்கத்தலைவர், மாஜி ஸப்மாஜிஸ்டிரேட் தோழர் டி.ஏ. ஏகாம்பரம் அவர்கள் பேரன் தோழர் கனக சபாபதி காலமானதை அறிந்து மிக வருத்தத்துடன் நமது மனமார்ந்த அநுதாபத்தை தோழர் ஏகாம்பரத்துக்கும் அவரது சுற்றத்தாருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## ஹிந்தி கட்டாய பாட எதிரொலி.

### காங்கரஸிலிருந்து ராஜிநாமா.

(ஒரு நிருபர்)

தஞ்சை, ஜூன். 1—

சென்னை சர்க்கார் ஹிந்திப் பாஷையைக் கட்டாய பாடமாக வைத்திருப்பதைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக தஞ்சை தோழர் எஸ். ஆர். சுப்பண்ணா காங்காஸ் அங்கத்தினர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்து விட்டார்.

### பெ. ஜெம்புலிங்கம் நாடார் ராஜிநாமா

ஹிந்தி கட்டாயபாடமாக வைக்கக்கூடாதென்று தமிழ்தொண்டர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்கள் உண்ணாவிரத நோன்புமே மாதம் 1-ந்தேதி முதல் இருந்து வருவதைக் குறித்து கனம் ஆச்சாரியார் யாதொரு முடிவும் சொல்லாதிருப்பதை முன்னிட்டு காங்கரஸ் அங்கத்தினர் பதவியிலிருந்து இவ்வூர் பிரபல மளிகை வியாபாரி தோழர் பெ. ஜெம்புலிங்க நாடார் ராஜிநாமா செய்து விட்டார்.